

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நேற்று (11.9.2025) சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று 13.9.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெறவுள்ள ”சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50” பாராட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.சு. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (11.9.2025) இசைஞானி இளையராஜா எம்.பி., இல்லத்திற்கு நேரில் சென்று 13.9.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெறவுள்ள ”சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50 பாராட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.சு. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (11.09.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா” நடத்துவது குறித்து தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டனர். இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.ச.சண்முகம், முதலமைச்சரின் இணைச் செயலாளர் கோ.லட்சுமிபதி, அரசு அருங்காட்சி யகங்கள் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், சென்னை மாநகராட்சி துணை ஆணையர் எம்.பிருத்திவிராஜ், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (11.9.2025) உலக நாயகன் கமல்ஹாசன் எம்.பி., இல்லத்திற்கு நேரில் சென்று 13.9.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெறவுள்ள ”சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50 பாராட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கோயம்புத்தூரில் 'இந்தியா டுடே' சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்க வருகை தந்த கர்நாடக மாநில பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் . மது பங்காரப்பாவைச் சந்தித்து, தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை, மாநில கல்விக் கொள்கை 2025 ஆகியவற்றை வழங்கி, கலந்துரையாடினார்.





## தி.மு.க. இளைஞர் அணி

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 9–இல் சோழவந்தான், மதுரை வடக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.09.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | சோழவந்தான் | ஜான்சி மஹால், வாடிப்பட்டி. |
| 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | மதுரை வடக்கு | ட்வின் மஹால், அண்ணாநகர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 10-09-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

## சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



ஆண்டிமடம் கிழக்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



கீழ்மலை வடக்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கரூர் மேற்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



சத்துவாச்சேரி தெற்கு பகுதி,
வேலூர் மாவட்டம்.



அரக்கோணம் நகரம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



பெரணமல்லூர் பேரூர்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.